©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 38.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 42A] CHENNAI, WEDNESDAY, OCTOBER 23, 2024
Aippasi 6, Kurothi, Thiruvalluvar Aandu–2055

## Part II—Section 2

**(Supplement)**

### NOTIFICATIONS BY GOVERNMENT

**பள்ளிக் கல்வித் துறை**

**No. II(2)/SE/1030/2024.**

**[பள்ளிக்கல்வி –ஆசிரியர் தேர்வு வாரியம் – முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை–1 பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமன போட்டித் தேர்வு நடத்த மாற்றியமைக்கப்பட்ட முதுகலை ஆசிரியர் பாடங்களுக்கான பாடத்திட்டத்தை (Syllabus) அரசிதழில் வெளியிடுதல் ஆணை வெளிடயிடப்படுகிறது.]**

**கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–**

*[அரசாணை (நிலை) எண்.219, பள்ளிக் கல்வி (ஆதேவா)த் துறை, 3 அக்டோபர் 2024, புரட்டாசி 17, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு–2055.]*

**படிக்கப்பட்டது:–**

பள்ளிக்கல்வி இயக்குநரின் ந.க எண்.074007/டபிள்யு3/இ3/2023, நாள்: 20.08.2024

**ஆணை: எண், 219, பள்ளிக் கல்வி (ஆதேவா)த் துறை, நாள்: 3 அக்டோபர் 2024.**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக் கல்வி இயக்குநர், முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை–1 பணியிடங்களுக்கான நேரடி நியமனம் செய்ய போட்டித் தேர்வு நடத்துவதற்கு அரசிதழில் வெளியிடப்பட்ட பாட வாரியான புதிய பாடத்திட்டங்கள் அனுப்புமாறு ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் கோரியுள்ளதாகவும், அதனடிப்படையில் மாநில ஆசிரியர் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் பாட வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட முதுகலை ஆசிரியர் உடற்கல்வி இயக்குநர் நிலை–1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை–1க்கான பாடத்திட்டம் (Syllabus), போட்டித் தேர்வுக்கான சிறுபான்மை மொழிகளான உருது, அராபிக், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய பாடங்களுக்கான மொழிப் பாடத்திட்டம் (Language Syllabus) தமிழ்நாடு மாநில பொதுப்பள்ளி கல்வி வாரியத்தின் ஒப்புதலுடன் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

2 எனவே, முதுகலை ஆசிரியர் உடற்கல்வி இயக்குநர் நிலை–1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை–1க்கான பாடத்திட்டம் (Syllabus), போட்டி தேர்வுக்கான சிறுபான்மை மொழிகளான உருது அராபிக், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய பாடங்களுக்கான மொழிப் பாடத்திட்டத்தினை (Language Syllabus) அரசிதழில் வெளியிடுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கோரியுள்ளார். (பாடத்திட்டத்தினை இணைப்பில் காணலாம்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை–1க்கான பாடத்திட்டம் (Syllabus) மற்றும் சிறுபான்மை மொழிகளான உருது, அராபிக், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய பாடங்களுக்கான மொழிப் பாடத்திட்டத்தினை (Language Syllabus) இவ்வரசாணையின் இணைப்பில் காணும் தமிழ்நாடு மாநில பொதுப்பள்ளி கல்வி வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பாடத்திட்டத்தினை அரசிதழில் வெளியிட அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)



Professor Academy
professoracademy.com
7070701005

GOVERNMENT OF TAMILNADU

# DIRECT RECRUITMENT FOR THE POST OF POST GRADUATE ASSISTANTS / PHYSICAL EDUCATION DIRECTORS – GRADE-I

# SYLLABUS

## 2024-2025

**State Council of Educational Research and Training**

Chennai - 600 006.

professoracademy.com

7070701005

# SUBJECT : தமிழ்

## SYLLABUS

| | |
|---|---|
| **அலகு 1** | **மொழி வரலாறு**<br>திராவிட மொழிகள், தமிழ்மொழியின் தொன்மை, தமிழ்மொழியின் தனித்தன்மை, தமிழின் கிளைமொழிகள், தமிழும் உலகச் செம்மொழிகளும், புதைபொருள் ஆய்வு, பண்பாட்டுப் பரவல். |
| **அலகு 2** | **சங்க இலக்கியமும், சங்கம் மருவிய கால இலக்கியமும்**<br>எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், இவற்றின் காலம், தொகுப்புமுறை, பாடுபொருள், அகநூல்கள், புறநூல்கள், அகப்புற நூல்கள், அற நூல்களின் சிறப்புகள். |
| **அலகு 3** | **காப்பியங்கள்**<br>ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள், புராணங்கள், பிற்காலக் காப்பியங்கள், கம்பராமாயணம், பெரியபுராணம், நளவெண்பா, தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், சீறாப்புராணம், இயேசு காவியம். இவற்றின் காலம், ஆசிரியர் வரலாறு, நூலின் மையப் பொருள், பதிப்புகள், உரைகள். |
| **அலகு 4** | **பக்தி இலக்கியம்**<br>பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தம், இவற்றின் அமைப்பு, ஆசிரியர்கள் வரலாறு, பதிப்புகள், உரைகள்.<br>**சித்தர் பாடல்கள்:**<br>தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரிநாதர், வள்ளலார் ஆகியோர் படைப்புகள். |
| **அலகு 5** | **சிற்றிலக்கியம்**<br>**96 வகைச் சிற்றிலக்கியங்கள் அறிமுகம்:**<br>கலம்பகம், உலா, தூது, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பரணி, பள்ளு இவற்றின் அமைப்பு, ஆசிரியர் வரலாறு, காலம், சிறப்புக் கூறுகள்.<br>**தனிப் பாடல்கள்:**<br>காளமேகப் புலவர், ஔவையார், கம்பர், இராமச்சந்திரக் கவிராயர், பலபட்டடை சொக்கநாதப் புலவர். |
| **அலகு 6** | **இக்கால இலக்கியம்**<br>**கவிதை:**<br>பாரதியார், கவிமணி தேசிக விநாயகனார், பாரதிதாசன், முடியரசன், சுரதா, நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், உடுமலை நாராயணகவி, கண்ணதாசன், மருதகாசி, வாலி, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், மு.மேத்தா, வைரமுத்து, சிற்பி, மீரா, பிரமிள், இன்குலாப், இரா.மீனாட்சி – படைப்புகள்.<br>**சிறுகதை:**<br>வ.வே.சு.ஐயர், புதுமைப்பித்தன், மௌனி, பி.எஸ்.ராமையா, கு.அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், கு.ப.ராசகோபாலன், அகிலன், வண்ணதாசன், ஆர்.சூடாமணி, அம்பை – படைப்புகள். |

Professor Academy

**புதினம்:**
மாயூரம் வேதநாயகம் பிள்ளை, இராஜம் ஐயர், அ.மாதவையா, கல்கி, மு.வரதராசனார், ஜெயகாந்தன், தி.ஜானகிராமன், கி.ராஜநாராயணன், இராஜம் கிருஷ்ணன், இந்திரா பார்த்தசாரதி, பாமா – படைப்புகள்.

**நாடகம்:**
மனோன்மணீயம் சுந்தரனார், சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், சி.என்.அண்ணாதுரை, கலைஞர் மு.கருணாநிதி, பி.எஸ்.இராமையா, ஆர்.எஸ்.மனோகர் படைப்புகள் – நவீன நாடக முயற்சிகள்.

**விருதுகள்:**
தமிழக அரசு, ஞானபீடம் மற்றும் சாகித்ய அகாதெமி விருது பெற்ற படைப்புகள்.

**அலகு 7 இலக்கணம்**

ஐந்திலக்கணம் – எழுத்து, சொல், பொருள் (அகப்பொருள், புறப்பொருள்), யாப்பு, அணி – பாட்டியல் – புலமை இலக்கணம் – தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம்.

**அலகு 8 திறனாய்வு**

திறனாய்வு – விளக்கம், வரையறை, பயன்கள், புதிய போக்குகள்.

**வகைகள்:**
பகுப்பு முறை, விளக்க முறை, மதிப்பீட்டு முறை, ஒப்பீட்டு முறை, பாராட்டு முறை.

**அணுகுமுறைகள்:**
அறவியல், சமூகவியல், வரலாற்றியல், உளவியல், மானிடவியல், தலித்தியம், பெண்ணியம், அமைப்பியல்.

**அலகு 9 நாட்டுப்புறவியல்**

பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுகள், சடங்குகள், நம்பிக்கைகள், திருவிழாக்கள், வழிபாட்டு முறைகள்.

**அலகு 10 தமிழோடு தொடர்புடைய பிற துறைகள்**

இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், இணையத்தமிழ், கணினித் தமிழ், அறிவியல் தமிழ், தொல்லியல்.

professoracademy.com 7070701005